# தகவல் அறியும் உரிமை குறித்த தமிழக அளவிலான விழிப்புணர்வுக் கலைப் பயணம்

## மக்கள் ஆய்வு

நூலக படிப்பு மட்டும் மாணவர்களுக்கு போதாது மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைகளை, படிக்கும் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்ற



எண்ணத்தோடு மாணவர்களை ஒருங்கிணைத்து, மக்களின் எண்ண ஓட்டங்களை துல்லியமாக கணித்து அதை வெகுஜன ஊடகங்கள் வாயிலாக மக்களிடையே கொண்டு சேர்ப்பதை முனைப்போடு அதாவது "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" லட்சியத்தோடு செயல்பட்டு வருகிறது டாக்டர் ச. ராஜநாயகத்தின் "மக்கள் ஆய்வு" மையம். இதுவரை கருத்துக் கணிப்புகளை மட்டுமே நடத்தி வந்த மக்க ஆய்வு மையம் முதன் முயற்ச்சியாக இந்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை எல்லாதர மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற இலக்கோடு ஒரு மாநில அளவிலான பரப்புரை பயணத்திற்கு ஏற்பாடு செய்தது.

## தகவல் அறியும் உரிமைச் சட்டம்

நாள்தோறும் பல்வேறு பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டு வரும் மக்களுக்கு அதற்கான தீர்வு எண்ண, யாரிடம் போய் கேட்பது என்று விழிபிதுங்கி நின்று கொண்டிருக்க இந்த தகவல் அறியும் உரிமைச் சட்டம் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்று எண்ணி, மக்கள் ஆய்வு மையத்தின் இயக்குநர் டாக்டர் ச. ராஜநாயகம் அவர்கள் தமிழக அனைத்துக் கல்லூரி மாணவர்களையும் ஒருங்கிணைத்து அவர்களுக்கு இந்த சட்டத்தைப் பற்றி விளக்கமளித்து, பல்வேறு பயிற்சிகளை வழங்கி மே 9 முதல் 22 முடிய தமிழக அளவிலான விழிப்புணர்வுக் கலைப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தார். நிகழ்ச்சி நடைபெறும் இடங்களை முன்னரே தேர்வு செய்து அந்தந்த இடங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிகளின் முன்னிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை எடுத்து செல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு, மக்களுக்கு மிகவும் பரிச்சயமான வீதி நாடகத்தை கையிலெடுத்து சிறந்த முறையில் வழிநடத்திச் சென்றார் மக்கள் ஆய்வு இயக்குநர் டாக்டர் ச. ராஜநாயகம்.



## வீதி நாடகம்

பொதுவாக ஒரு செய்தியை மக்களிடம் விரைவாக எடுத்தச் செல்ல உறுதுணையாக இருப்பது வீதிநாடகங்கள் தான். வீதிநாடகங்கள் என்றால் ஒரு பனியன் அணிந்தோ அல்லது முண்டாசு கட்டியோதான் கலைஞர்கள் தோண்றுவார்கள். அதனை கட்டுடைக்க கலைஞர்கள் அனைவரும் கோட் அணிந்து பங்கேற்றது இதில் சிறப்பம்சமாக விளங்கியதோடு மட்டுமில்லாமல் அந்த உடையலங்காரம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. பொதுவாக மக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையம், சந்தை எனத் தேர்வு செய்து மக்களை நோக்கி மக்கள் இருக்கும் இடங்களுக்கே சென்று கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டினர். அனைத்து மாவட்டங்கள், 80 இடங்கள், 100-த்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் என ஒரு மெகா பயணத்ததை மேற்கொண்ட எங்களது குழு சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோரை சந்தித்து வந்திருக்கிறது.

## கலைவழி விழிப்புணர்வுப் பயணம்

கோடை விடுமுறைகளை குதூகலமாக களிக்க இருந்த மாணவர்களை சற்றே சமுதாயத்தின் மீது ஒரு கனிவான பார்வையை உண்டாக்க தமிழக அனைத்து கல்லூரிகளிலிருந்தும் மாணவர்களை தேர்வு செய்து அவர்களுக்கு மே 7, 8, 9 தேதிகளில் பயிற்சி அளித்து, முதல் நிகழ்ச்சியின் அரங்கேற்றமாக சென்னை வடபழனி முருகன் கோவில் முகப்பில் சென்னை மாநகராட்சியின் வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் முன்னிலையில் கலைப் பணயம் தொடங்கியது. விழாவிற்கு சிறப்பு செய்த மேயர் அவர்கள் சட்டத்தை அனைவரும் பயன்படுத்தி பயனடைய வேண்டும் என்றும் இதுவரை எவ்வளவு பேர் இந்த சட்டத்தின் மூலம் தகவலை கேட்டு பெற்றுள்ளார்கள் என்ற விவரத்தையும் மக்களுக்கு தெளிவாக விளக்கி கூறினார்.

மே 10-ம் தேதி காலை திருமழிசை வழியாக திருவள்ளூர், திருத்தணி, வேலூர் , வாணியம்பாடியைச் சென்றடந்து முதல் நாள் நிகழ்ச்சி முடிவடைந்தது. வாணியம்பாடி நிகழ்ச்சிக்கு சிறப்பு செய்ய நகராட்சித் தலைவர் அவர்கள் வருகைப்புரிந்திருந்தார். சாதி, மத, கட்சி வேறுபாடின்றி எல்லா சமுகத்திற்கும் பாரபட்சம் இல்லாமல் எல்லா நலத்திட்டங்களையும் கொண்டு சேர்க்க பாடுபட்டு வருவதாக சொன்ன அவர் தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஏழை எளிய மக்களின் பாதுகாப்புச் சட்டம் அதை அனைவரும் நல்வழியில் பயன்யடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.








மாநகர மேயர்
சென்னை



நகராட்சித் தலைவர்
வாணியம்பாடி

இரண்டாவது நாள் பயணம் திருப்பத்தூரில் தொடங்கி கிருஷ்ணகிரி, காரியமங்கலம், தருமபுரி, பண்ணப்பட்டி கிராமம், ஓமலூர் என களை கட்டியது. கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி நகராட்சித் தலைவர்கள் வருகை தர ஒப்புதல் தெரிவித்திருந்தபோதும் பல்வேறு பணிகளின் நிமித்தம் அவர்களால் வரமுடியாமல் போயிற்று. பண்ணப்பட்டி கிராமத்தில் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு ஓமலூரரை நோக்கி பயணம் செய்த எங்களது குழு அன்றைய நாளின் நிகழ்ச்சிகளை சிறப்பாக முடித்தது.

மூன்றாவது நாள் பயணம் சேலத்தில் ஆரம்பித்து அடுத்தகட்டமாக ராசிபுரத்தை அடைவதற்குள் அங்கு எங்களின் கலைப்பயண குழுவினரை வரவேற்பதற்கு ஆவலோடு காத்து இருந்து, வாழ்த்துரையை வழங்கி சட்டத்தின் தேவையை உணர்த்தி சென்றார் நகராட்சித் தலைவர் அவர்கள். நாமக்கல் நிகழ்ச்சிக்கு சிறப்பு செய்ய நகரமன்ற உறுப்பினர்கள் மூவர் வருகை புரிந்திருந்தனர். கரூர், கணபதிபாளையம் நால்ரோடு, ஈரோடு என மூன்றாவது நாள் நிகழ்ச்சி நிறைவுற்றது.

நான்காம் நாளின் தொடக்க நிகழ்ச்சி பெருந்துறையில் தொடங்கியது. சட்ட மன்ற உறுப்பினர் வர இயலாத காரணத்தினால் அவரின் பிரதிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கு சிறப்பு செய்தார்கள். திருப்பூர் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி சிறப்பிக்க மாநகராட்சியின் தந்தை அவர்கள் வருகை புரிந்திருந்தார். புதிதாக உருவான மாநகராட்சியில் பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட போவதாக தெரிவித்த அவர் நாட்டிற்கு மிகவும் தேவையான தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அடுத்ததாக நடைபெற்ற மேட்டுப்பாளையம் நிகழ்ச்சிக்கு நகராட்சி தலைவர் அவர்கள் வருகைப் புரிந்து சிறப்பு செய்தார்கள். இறுதியாக குன்னூரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு அந்த நகராட்சியின் தலைவர் அவர்களும் ஆணையர் அவர்களும் வருகைப் புரிந்து மாணவர்களின் இந்த முயற்ச்சிக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதோடு மட்டுமில்லாமல் குன்னூர் நகராட்சியில் மேற்கொண்டு வரும் நலத்திட்டங்களையும் விளக்கி கூறினர்.





நகராட்சித் தலைவர்
ராசிபுரம்



நகராட்சி உறுப்பினர்
நாமக்கல்



மாநகர மேயர்
திருப்பூர்



நகராட்சித் தலைவர்
குன்னூர்



ஐந்தாம் நாள் நிகழ்ச்சி கோவையில் சிறப்பாகத் தொடங்கியது. பொள்ளாச்சி யை முடித்துக் கொண்டு பழனியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சி தலைவர்கள் கலந்து கொண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் பரந்துபட்ட அளவில் அனைத்து மக்களிடமும் சென்றடைய வேண்டும் அதற்காக இந்த மாணவ மாணவிகளின் முயற்சி போற்றுதற்குரியது என்று பேசினார். அன்றைய நிறைவு நிகழ்ச்சி திண்டுக்கலில் நகராட்சி தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பங்குபெற்ற அனைத்து கலைஞர்களையும் கௌரவிக்கும் வகையில் அனைவருக்கும் பொன்னாடை போர்த்தினார்.

ஆறாம் நாள் நிகழ்ச்சி பெரியகுளத்தில் தொடங்கியது. தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் வணக்கத்துக்குரிய முன்னாள் முதல்வர் வருவதற்கு ஒப்புதல் தெரிவித்திருந்தார். கடைசி நேர சட்டமன்ற பணிகளால் அவரால் வரமுடியாமல் போயிருந்தாலும் முன்னாள் மக்களவை உறுப்பினர் திரு. தங்கத் தமிழ்ச் செல்வன் அவர்கள் பெரியகுளம், தேனி, ஆண்டிப்பட்டி என அனைத்து இடங்களுக்கும் வந்து கலைஞர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தார். பெரியகுளத்தின் நகராட்சி தலைவி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தார். ஆண்டிபட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியிம் பேரூராட்சித் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு இதுவரை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் தங்களுக்கு வந்த கடிதங்களையும் அதற்கு அவர்கள் எடுத்த நடவடிக்கைகளையும் சிறப்பாக எடுத்துக் கூறினார்.மதுரை, திருமங்கலம், விருதுநகர் ஆறாம் நாள் நிகழ்ச்சியை நிறைவு செய்தது கலைப் பயணக் குழு.

ஏழாம் நாள் காலை கோவில்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சியின் கவுன்சிலர் அவர்கள் கலந்து கொண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் கிராமத்து மக்களையும் சென்றடைய வேண்டும் அதற்கு மாண, மாணவிகளின் இந்த முழுமுயற்சி பிரமிபூட்டுவதாகவும் இருக்கிறது எனக் கூறிச் சென்றார். சங்கரன்கோவில், திருநெல்வேலி வழியாக சென்ற எங்களது விழிப்புணர்வு கலைப் பயணம் அன்று மாலை நான்குநேரியைச் சென்றடைந்தது. எதிர்பாரதவிதமாக அங்கு வந்திருந்த நான்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் அவர்கள் மாணவர்கள் இந்த சமூக அக்கறையைப் பார்த்து வியந்ததோடு மட்டுமல்லாமல் அங்கு


நகராட்சித் தலைவர்
பழனி


நகராட்சித் தலைவர்
திண்டுக்கல்


திரு. தங்க தமிழ்ச் செல்வன்
முன்னாள் மக்களவை
உறுப்பினர்


பேரூராட்சித் தலைவர்
ஆண்டிப்பட்டி


நகர மன்ற உறுப்பினர்
கோவில்பட்டி

நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தலைமைத் தாங்கி நடத்திக் கொடுத்தார். அன்று இரவு வள்ளியூரில் எங்களது நிகழ்ச்சியை முடித்துக் கொண்டோம்.

மறுநாள் காலை நாகர்கோவில் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சியின் தலைவர் அவர்கள் தலைமைத் தாங்க கார்மேல் மேல்நிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் அவர்கள் முன்னிலை வகித்து சிறப்பு செய்தார்கள். திருவைகுண்ட நிகழ்ச்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் வருகைத்தர ஒப்புதல் தெரிவித்து கடைசிநேர நிகழ்ச்சிகளால் அவரால் வரமுடியாமல் போனாலும் அவரின் சார்பாக பிரதிநிதிகள் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்தனர். தூத்துக்குடி நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு கடலாடியை நோக்கி பயணித்தோம். அங்கே நமது வருகைக்காக வெகுநேரம் காத்திருந்தார் பஞ்சாயத்து தலைவர் அவர்கள். அங்கே நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்கள் தங்கள் சந்தேகங்களை கேட்டறிந்தது எங்கள் குழுவிற்கு உற்சாகத்தை ஊட்டியது.

18-ம் தேதி காலை ராமநாதபுரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகராட்சித் தலைவி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள்.பரமக்குடி, மானாமதுரை, சிவகங்கை, திருப்பத்தூர் என ஒரு நீண்ட பயணத்துடன் மாலை திருமயத்தை வந்தடைந்தோம். “எங்க ஊருக்கு எந்த நிகழ்ச்சியும் கிடையாத” என்ற கேள்வியுடன் வந்த அந்த ஊர் பள்ளியின் ஒய்வுபெற்ற தலைமையாசிரியர் அவர்களை தலைமை வகிக்கச் செய்து நிகழ்ச்சியை நடத்தி முடித்தோம். “எங்க ஊருக்கு வந்திருக்கீங்க ஒரு வாய் காப்பி, தண்ணி சாப்பிடாமா போனா எப்படி” என்று வந்த அந்த ஊரின் வார்டு மெம்பர் அவர்களின் உபசரிப்பை அன்போடு ஏற்றுக்கொண்டு புதுக்கோட்டையை நோக்கி பயணித்தோம். புதுக்கோட்டை நிகழ்ச்சிக்கு நகராட்சியின் தலைவி அவர்கள் வருகைத் தந்து இது போன்ற நிகழ்ச்சிகள் நாட்டு மக்களுக்கு மிக அவசியம் என்று கூறிச் சென்றார்.அன்று இரவு கீரனூரில் எங்கள் நிகழ்ச்சியை நிறைவு செய்தோம்.

19-ம் தேதி காலை திருச்சியில் வணக்கத்துக்குரிய மேயர் அவர்கள் தலைமைத் தாங்க, தூய வளனார் கல்லூரி முதல்வர் அவர்கள் முன்னிலையில் நிகழ்ச்சி சிறப்பு பெற்றது. மேயர் அவர்கள்



நகராட்சித் தலைவர்
நாகர்கோவில்



சட்டமன்ற
உறுப்பினரின் பிரதிநிதி
திருவைகுண்டம்



பஞ்சாயத்து தலைவர்
கடலாடி



வார்டு உறுப்பினர்
திருமயம்



நகராட்சித் தலைவி
புதுக்கோட்டை

இதுவரை மேற்கொண்டு வரும் நலத்திட்டங்களுக்கு எவ்வளவு நிதி செலவழிக்கப்பட்டது, நலத்திட்டங்களுக்காக வந்திருக்கும் நிதி எவ்வளவு என்பதை வெளிப்படையாக எடுத்துக் கூறினார். திருவரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அனைத்து கட்சியை சார்ந்த மாநகர உறுப்பினர்களும் வருகைத்தந்தது எங்கள் குழுவிற்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பெரம்பலூர், அரியலூர், திருவையாறு, தஞ்சாவூர், நீடாமங்கலம் என தொடர்ந்து வந்த எங்களது கலைப் பயணம் அன்றைய நாளினை நிறைவு செய்தது.

20-ம் தேதி காலை நாகையில் தொடங்கிய எங்களது கலைவழி விழிப்புணர்வுப் பயணம் திருவாரூர் வழியாக மயிலாடுதுறை, சிதம்பரம், விருத்தாசலம், கடலூர் என வலம் வந்தது. மக்களின் எண்ணற்ற சந்தேகங்களுக்கு விடையளித்துக் கொண்டும் மாணவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டும் வந்தார் மக்கள் ஆய்வு இயக்குநரும் கருத்துக்கணிப்பு வல்லுநருமாகிய டாக்டர் ச. ராஜநாயகம் அவர்கள்.

21-ம் தேதி காலை பண்ருட்டி நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு விழுப்புரம் வந்தடைந்தோம். அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நகராட்சியின் தலைவர் அவர்கள் வருகை தந்து சிறப்பு செய்தார். “ஜனா அண்ணே எப்படி இருக்கீங்க” என்ற சிறு பையனின் கேள்விக்கும் புன்முருவலோடு பதிலளித்த நகராட்சி தலைவரின் எல்லோருடனும் எளிதில் பழகும் விதம் கண்டு மலைத்துப் போனோம். திண்டிவனம், செஞ்சி என நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு அன்று மாலை திருவண்ணாமலை வந்தடைந்தோம். அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நகராட்சியின் தலைவர் அவர்கள் கலந்து கொண்டு, கருத்துக் கணிப்புகளை மிகத் துல்லியமாக எடுத்துவரும் டாக்டர் ச. ராஜநாயகம் அவர்கள் இது போன்ற மக்கள் நலப் பணிகளில் மாணவர்களை ஈடுபடுத்தி வருவது பாராட்டுதற்குரியது என்று கூறினார். அன்றைய நிறைவு நிகழ்ச்சியை போளூரில் முடித்து கொண்டோம்.

கலைவழி விழிப்புணர்வுப் பயணத்தின் நிறைவு நாளான 22-ம் தேதி அன்று உத்திரமேரூரில் தொடங்கிய நிகழ்ச்சியில் பார்வையாளர் ஒருவர் தானும் ஒரு கலைஞனைப் போல் கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது குழுவினருக்கு உற்சாகத்தை ஊட்டியது. காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தாம்பரம் என வரிசையாக


மாநகர மேயர்
திருச்சி


மாநகர உறுப்பினர்
திருவரங்கம்


நகராட்சித் தலைவர்
விழுப்புரம்


நகராட்சித் தலைவர்
திருவண்ணாமலை


தேசிய ஆலோசகர்
AICUF

நிகழ்ச்சிகளை முடித்து கொண்டு சென்னை மெரினா கடற்கரையை வந்தடைந்தோம். AICUF நிறுவனத்தின் தேசிய ஆலோசகர், கல்வியாளர் டாக்டர் ஹென்றி ஜெரோம் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்தார். நிகழ்ச்சியில் வழக்கறிஞர் பட்டம் பயின்று வரும் ஒரு மாணவர் இந்த தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஒரு சில திருத்தங்களுடன் இன்னும் முழுமைப்படுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

## தொடர் பணிகள்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று வந்த எங்களது கலைப்பயணக்குழு பயணத்தின் போது தாங்கள் கண்ட, கேட்டறிந்த செய்திகளையும், ஆங்காங்கே பொதுமக்கள் எழுப்பிய கேள்விகளையும், அதற்கான விளக்கங்களை எளிய வடிவில் அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் ஒரு சிறு கையேட்டினையும் நிகழ்ச்சிகளின் நிகழ்வுகளை ஒன்றுவிடாமல் ஒளிப்பதிவு செய்து வைத்திருக்கும் ஒளிநாடாக்களைத் தொகுத்து ஒரு விளக்க குறும்படமாகவும் தயாரிக்க சென்னை மக்கள் ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தங்களில் இதற்கான பிரதிகளோ, குறுந்தகடுகளோ தேவைப்பட்டால் உடனே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்புக்கு

**மக்கள் ஆய்வு**
லொயோலா கல்லூரி
சென்னை - 600 034
செல்: 9952918061 / 9940365485